ரூபாய் மோசடி செய்திருப்பதாக பல புகார்கள் வந்திருக்கின்றன, போட்டோஸ்டெட் காப்பியும் இங்கே காட்டப்பட்டிருக்கிறது. அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எஸ். ஐ. இ. டி. கல்லூரியில் அவர்கள் சம்பளமே வாங்கிக்கொண்டிருக்கிறார்கள், என்று தகவல் இருக்கிறது. ஆகவே நாம் மானியத்தை நிறுத்தி விடுகிற நிலையில் இப்படி அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். பயோனியர் குமாரசாமி கல்லூரி பற்றி பல்வேறு பிரச்சினைகள் விசாரணையில் இருந்து வருகிறது.

திரு. ஓ. சுப்பிரமணியம் : சமீபத்தில் ''ஸ்டார் நைட்'' போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஆரம்பப் பள்ளி மாணவர்களாகிய சிறுவர்களிடமிருந்து கூட வசூல் செய்வதாக தகவல் இருக்கிறது. அது உண்மையா? அப்படி சின்னஞ்சிறு சிறார்களிடமிருந்து வசூல் செய்கிற காரியத்தை இனிமேலாவது நிறுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றி தகவல் இல்லை.

வள்ளியூர் உயர்நிலைப் பள்ளி.

* 645 வினா—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) நெல்லை மாவட்டம் நெல்லை தெற்கு பகுதிக்கு உட்பட்ட வள்ளியூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவிகள் சேர்க்கப்படாததற்கு காரணம் என்ன?

(ஆ) இந்தச் சலுகை வள்ளியூரிலுள்ள இதர தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு மேற்கண்ட அரசு உயர்நிலைப் பள்ளிக்கு மட்டுமே மறுக்கப்பட்டது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) பெண்களுக்கென தனியாக பள்ளிகள் இயங்கும் இடங்களில், ஆண்கள் பள்ளிகளில் பெண்களைச் சேர்ப்பது பொதுவாக தவிர்க்க வேண்டுமென அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது தான் இதற்குக் காரணமாகும்.

(ஆ) இல்லை. வள்ளியூரிலுள்ள கலைகார்டியா உயர்நிலைப் பள்ளியில் மாணவிகள் சேர்க்கக்கூடாதென பிறப்பிக்கப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரின் ஆணையை எதிர்த்து பள்ளி நிர்வாகம்

1978 மார்ச் 21]

உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து, அவ்வாணை அமுல் படுத்துவதிலிருந்து நிறுத்த உத்தரவு பெற்றுள்ளது. ஆகையினால் இப்பள்ளியிலும் மற்றும் வடக்கன் குளத்தில் இதே நிர்வாகத்தின் கீழுள்ள பள்ளியிலும் மாணவிகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சென்னை மாவட்ட நூலகக் கட்டிடத்தில் நடைபெறும் கூட்டங்கள்.

* 646 வினா—திரு. என். கிட்டப்பா.—மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னை மாவட்ட மத்திய நூலகக் கட்டிடத்தில் ஒலிபெருக்கி பயன்படுத்தாமல் நடக்கும் இலக்கியக் கூட்டங்கள், செயற்குழுக் கூட்டங்களுக்குக் கூட போலீஸ் அனுமதி பெற்றாக வேண்டும் என்று அரசு புதிதாகக் கட்டளையிட்டுள்ளதா?

(ஆ) ஆம் என்றால், எப்பொழுது முதல்?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மதுரையைச் சுற்றியுள்ள ஒன்றியப் பணியாளர்களுக்கு படிகள்.

* 647 வினா—திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

மதுரை கார்ப்பரேஷன் எல்லையிலிருந்து 16 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள கிராமங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள், ஒன்றிய சிப்பந்திகள் அனைவருக்கும் வீட்டு வாடகைப் படியும் நகர ஈட்டுப் படியும் கொடுக்கப்பட வேண்டும் என்ற இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரையினை அமுல் படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரையை ஏற்று மதுரை நகர எல்லையிலிருந்து 16 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள இடங்களில் பணி புரியும் ஆசிரியர்கள் உட்பட எல்லா ஊராட்சி ஒன்றிய ஊழியர்களுக்கும் குறிப்பிட்ட சில அளவுகளின்படி வீட்டுவாடகை மற்றும் நகர ஈட்டுப் படிகள் கொடுக்கப்படவேண்டும் என்று அரசு ஏற்கனவே உத்தரவிட்டுள்ளது.